உ

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் ௰௬ } சுபானு—ஆடி 1943—ஜூலை { மலர் ௪

பொழிற்றொண்டர் குறிப்புக்கள்

சங்க ஆண்டுவிழா.

இச்சங்கத்தின் ஆண்டுவிழா அழைப்பிதழிற்கண்டவாறு, சுபானு, ஆடி, க,உ-ஆம்நாட்களில் மிகச்சிறப்பாக நிகழ்வுற்றது. விழா நிகழ்ச்சிகளை இடையறாது உடனிருந்துகேட்டு, அவற்றின் சுருக்கங்களைக் குறித்து வைத்துப் பின்னர் எழுதிப் பொழிற் குதவிய பெருமை, இச்சங்கத்தின் பேரன்பரும், இருமொழிச் செல்வரும், கற்றதனாலாய பயனைக் கைக்கொண்டொழுகி வரு வாரும் ஆகிய கலைச்செல்வர் திரு. வேலாயுதம் பிள்ளையவர்கள், B. A., L. T., சென்ற ஆண்டுவிழாவிலும் இவ்வரியதொண்டினைச் செய்தருளியவர் இப்பெருந்தகையோரே என்பது, நம் பொழில் அன்பர்அறிவர், இவர்கட்குஉதவியாகநின்றுஅரியதொண்டினைச் செய்தவர், நம்சங்கத்து ஆசிரியர்களுள் ஒருவராய திரு. குழந்தை வேலர் ஆவர். இவ்விருவர்கட்கும் நம்மனமார்ந்த வாழ்த்து உரிய தாகும்.

"முதல் நாள் மாலை நான்குமணிக்கு விழாத்தலைவர் ஆசிரியர். திரு. அ. வரதநஞ்சையபிள்ளை அவர்கள் இன்னிசை முழக்குடன் மன்றிற்கழைத்து வரப்பெற்றார். கடவுள் வணக்கம், தமிழ்த் தாய் வாழ்த்து பாடப்பெற்றன. வரவேற்புரை வழங்கினர். பின் ஆண்டறிக்கை படிக்கப் பெற்றது.

தலைவர் முன்னுரை :—நற்றவத்தால் தமிழ் மடந்தை பெற் றெடுத்த புதல்வர் யாவருக்கும் நன்றிகூறி, தமிழ் நெடுங் கணக் கின் வல்லெழுத்துக்கள் மெல்லெழுத்துக்களின் இடைப்பட்டாற் போல அறிஞர்களைத் தமதுரைகளுக்கு வேண்டியன இடை

யிட்டுக்கொள்ளும்படி வேண்டினர். பின்னர்புகழுருவாய தமிழ வேளை நினைவு கூரச்செய்து இப்பொழுதைய தலைவரும்அமைச்சரும்'I'நான்நீயெனும்முன்னெழுத்துடையதற்கேற்ப,நான் நீஎன முன்வந்து பணியாற்றுவதைப் பாராட்டினர். உலகத்திற்கே வழி காட்டிய பழந்தமிழர்களின் வரலாற்றையும் ஒழுகலாறுகளையும் படம்பிடித்துக் காட்டுவன சங்க இலக்கியங்களெனும் கண்ணுடியேயெனவும் யாவரும் திருக்குறள் வழி யொழுகின் வானுறையும் தெய்வம் போற்றும் தெய்வங்களாகலாமெனவும் விளக்கினர், பழந்தமிழ்ப் புலவோர் அறிவாற்றலில் மேம்பட்டு செல்லிடமெலாம் சிறப்புற்றிருந்தனர். தச்சன் மரங்களைவாய்ச்சி முதலிய ஆயுதங்களால் தக்காங்கு சீர் செய்து சாமான்கள் செய்தல்போல அவர்கள் கண்ட நிகழ்ச்சிகளை எல்லாம் செய்யுள் வடிவில் பெய்து வந்தனர். அந்நாளைய மன்னர்களும் செல்வர் களும் தமிழ்ப்பற்று மிக்கவாராய்ப்புலவர்களைப் புரந்தனர். நாளடைவில் புரப்பவரின்மையின் புலமையும் போற்றுவாரின்றி மயங்கியது. ''உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு'' என்பன போன்றவளமிக்கவீறுபெறு தமிழ் நலிந்து''அத்தி முகத்தோனே அரனுர்திருமகனே'' என்பனபோன்றசெய்யுட்கள் மலியத் தலைப் பட்டனவென எடுத்துக்காட்டினர்.

தமிழாக்கங்கருதி எல்லாமக்களும் கல்வியறிவுடையவராலுல்தான் நாடு விளங்கும். அறிவியற்றுறையில்மேல்நாடுகளைப் பின்பற்றவேண்டும். புலவர்கள் பலர் அடிக்கடியொன்றுகூடி, புதுநூல்களையாய்ந்து கூட்டுவனகூட்டிக் குறைப்பன குறைத்து ஒழுங்குபடுத்தி செப்பஞ் செய்தல் மாணவர்க்கு வேண்டிய நூல்களைத்தக்க புலவர்களைக் கொண்டெழுதுவித்தல் யாண்டும் தமிழ் மணங் கமழ இலவசக் கல்வி பரப்புதல் ஆயபணிகளை யாற்றவேண்டும். இதற்குப் பொருளாளர்கள் வேண்டிய வேண்டியாங்குதவவேண்டும். இத்தகைய தொண்டுகளுக்கு கரந்தைத் தமிழ்ச் சங்கமே சிறந்த நிலையம். இது கழகமல்ல; தமிழ்த்தாயின் திருக்கோயில் அவள் வீற்றிருக்கும் முதலிடம் (மூலத்தானம்). இங்கு தமிழகத்தின் வடவெல்லையாய மலையின் பெயரும் அம்மலையுடையான் பெயரும் கொண்ட புலவர்களும் குன்றமெறித்த தமிழ்க்கடவுளின் இருபெயரைத்தாங்கிய பெரியார்களும் தொண்டாற்றுகின்றனர். தமிழ் நாட்டரசர் செட்டிநாட்டேந்தல் ஈகையும் தமிழ் வளர்க்குந் தகைமையும் பாரரட்டற்குரியன.

சிலநூற்ருண்டுகளுக்கு முற்றோன்றிய ஆங்கிலம், அறிவியற் கலையுடனும் அண்மையிற்றோன்றிய மலையாளம் சோதிடக்கலை யுடனும் வளமிகுந்த பல புத்தாடைகளுடனும் மிளிர்கின்றன.

தமிழ்க்கலைகள் பலவற்றை தீ, நீர், மறப்பு முதலியன வாரி வாரிக்கொண்டேகினும் அவள் தள்ளப்படத்தக்க அத்துணை கிழவியல்லள். அவளுக்கு தக்க புத்தாடைகளை தற்கால முறையில் ஆக்கித்தரவேண்டிய கடமை அவள் மக்களுடையது. பிற மொழி வழி, அறிவு பெறுவது பெருஞ்சுற்று வழி. தமிழனுக்குத் தமிழ்த்தாய் வழியன்றி மீட்சியில்லை. தமிழர் யாவரும் சமயம், கோட்பாடு, கொள்கை, எனும் வேற்றுமைகளை விடுத்து ஒன்றே குலமென்பதுணர்ந்து தாய்மொழி வளர்ச்சியில் கருத்துடையராய் ஒற்றுமையுடன் பணியாற்றி உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளலாகவும் அருமையுடைத்தென்று அயராமலும் இச்சங்கத்தையே நிலைக்களமாகக் கொண்டு தொண்டு புரிய வேண்டும் என யாவரும் உளங்கொளத்தக்காங்கு பேருரை வழங்கினர்.

"காவியச்சுவை" எனும் பொருள்பற்றி திரு. குமார வீரையர் அவர்கள் :—

சிந்தாமணியுரையில் நச்சினர்க்கினியர், காப்பியமெனுஞ் சொல் தொல்காப்பியத்து கூறப்படாமையாலும் வடசொல்லாத லாலும் தொடர்நிலைச் செய்யுளுக்கிடக்கூடிய பெயரல்லவென்பர். எனினும் அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரவுரையில், இச்சொல் பெருங்கதை முதலிய நூல்களில் பயன்படுத்தப் படுதலாலும் வடசொற்களைத் தமிழ்ப்படுத்தி வழங்கல் பொருந்துமாதலாலும் தொடர்நிலைச் செய்யுளுக்குப் பொருந்தும் என்கிறர். ஐம்பெருங் காப்பியமெனும் பெருவழக்குப்பற்றி உள்ளோன்தலைவனக அல்ல தில்லோன் தலைவனக, உள்ள தல்ல தில்லது நாற்பொருள் பயப்ப, சுவைபடக்கூறுவன காப்பியங்களெனல் இழுக்காகாது. சமணம், பௌத்தம், சைவம், வைணவம் முதலிய கோட்பாடு கொள்கை நோக்காது தமிழ்ச்சுவைபற்றி நூல்களைப் போற்றல்வேண்டும். இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை அரசியல் பிழைத்தோர்கறங் கூற்றுதலையும் உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்த ஊழ்வினை யுறுத்துவந்தூட்டு மென்பதையும் வலியுறுத்தி, சேர சோழ பாண்டியர்களின் பெருமைகளை விளக்க இயற்றினரெனவும், பாம்பானது தன் தோலுரித்தலோடு பல்லிலுள்ள நஞ்சு நீரையும் கக்கிவிடுகின்றற்போல புறப்பற்றை யொழித்தலோடகப்பற்றையும் ஒழிக்க வேண்டுமென்பதைச் சிந்தாமணிச் செய்யுளால் விளக்கியும் விலங்கின்றி விலங்கின்வாலாடிற்றென சிவப்பிரகாசர் 'கவரி வீசியதை' செப்பியதையும் நயம்பட விளக்கிப்பேசினர்.

தலைவர் கருத்து :—பெரிய புராணம் திருவிளையாடல் முதலியன வடமொழியினின்றும் மொழிபெயர்க்கப்பட்டன

வெனக்கருதப்படுகிறதெனவும். காதலில்லாத வாழ்க்கைகள் சிறந்தன அல்ல வென வீரந்ததும்பக் கற்பின் சிறப்பு விளங்கப் பேசினர். இயற்கையழகோடு தோன்று தொட்டுப் பழகிய பெருமை தமிழனுக்கே உண்டு எனவும் வேப்பம்பூவை நண்டின் கண்ணிற்குவமித்துக் காட்டியது வியத்தற்குரியது எனவும் மொழிப்பற்றுக் குன்றக் குன்ற, வாழ்க்கைநலம் குன்றும் எனவும் விளக்கினர்.

தமிழொலி எனும் பொருள்பற்றி, திரு. தெ. பொ. மீனட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் விளக்கமாகப் பேசினர்கள். இதன் விரிவு அடுத்த இதழில் வெளிவரும்.

இரண்டாம் நாள் விழா

ஆசிரியர், வரதநஞ்சைய பிள்ளை தலைமையில். முற்பகல் 9 நாழிகைக்கு முதுபெரும் புலவர் பண்டிதமணி மகாமகோ பாத்தியாய திருவாளர் மு. கதிரேசச்செட்டியார் அவர்களின் பாராட்டு விழா தொடங்கியது.

தலைவர்' அவர்கள், இவர்களின் புகழைப் பேச ஆயிரம் நா வேண்டும். இளங்கோ, நச்சினர்க்கினியர், அடியார்க்கு நல்லார் ஆயோரே மீண்டும் தமிழை வளம்படுத்த இவராய்த் தோன்றி னர் போலும் எனப்பாராட்டினர்.

திரு. மீனட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் இயன்மொழி வாழ்த்துப் படித்துக் கொடுத்தார்கள். பின்னர் சங்கத்தலைவர் அவர்கள், இதுகாறும் பிறமரபினரே பெற்றுவந்த இப்பட்டம் தமிழரும் பெறுந்தகுதி யுடையாரென்பதைக் காட்ட எண்டிசை யும் புகழ் பண்டிதமணியை அடைந்துளது எனப்பாராட்டிப் பேசினர்.

நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள், இவர் களின் புகழ் விரிப்பின் அகலும், தொகுப்பின் எஞ்சும் தன்மைத் தெனவும் அஃகியகன்ற அறிவும், நுண்மாண் நுழைபுலமும் பெற்றவர் எனவும், சிறப்பாகச் சிந்தாமணி, சிலப்பதிகாரம் மணிமேகலை, சங்கநூற்கள் தொண்டர்புராணம் முதலியவற்றை யாவரும் உளங்கொளத்தக்காங்கு உரைக்கும் வன்மையுடையார் எனவும் சிறந்த கவிஞர், கட்டுரையாளர், நூலாசிரியர், உரை யாசிரியர், ஞானசிரியராகவும் விளங்குபவர், எனவும் மகா மகோபாத்தியாய பட்டமே அவரையடைந்து சிறப்புற்றதென

வும் சிறந்த புரவலராய் செட்டிநாடெங்கும் தமிழ் மணக்கச் செய்த பெருந்தகை எனவும் பாராட்டினர்.

திரு. தெ. பொ. மீனுட்சிசுந்தரம்பிள்ளையவர்கள், அரசியற் றலைவர் எல்லாம் அவர்கள் காலத்தல்லது பின்னர் யாவருமறிய விளங்காது மறைகின்றனர். புலவர்களின் புகழோ என்றும் நிலவி நிற்கக் காண்கின்றோம். இன்றைக்குக் கம்பனை, செகசிற்பி யைப் பலரறிவர். நிலையாவுலகில் தன்புகழும் பேசும்பொருளும் விளங்க நிலைக்கச்செய்வது புலவனின் திறமையே. கம்ப இராமாயணத்தை எரிக்கு இரையாக்கலாம், ஆனல் கம்பன்தந்துள கவிச்சுவையை எவரும் அழிக்க முடியாது. தமிழரெல்லாந் தலைநிமிர இவர் வாழவேண்டுமென பேசினர்.

கரந்தைக் கவியரசு, கதிரவன் ஒளியின்முன் திங்கள், உடுக்கள், முதலியவற்றின் ஒளி தோன்ற, ஆனல் நம் கதிரேசர் முன்னிலையில் இளம்புலவர்களும்நன்கு விளங்குவர், அடியார்க்கு நல்லார் புலவர்க்கே விளங்கக் கூறுவர். ஆனல் இவர் பொருள் காண முடியார்க்கு நல்லாராய் மொழிவர். இவர் காட்டும் நயங்களைத் தொகுப்பின் அதுவே பலபேரிலக்கியங்களாகுமெனக் கூறினர்.

திரு. சடகோபராமாநுசம் பிள்ளையவர்கள்:—"யாதும்...... கேளிர்" என்ற கணியன் பூங்குன்றன் பிறந்த நாட்டிற் பிறந்தவர். தேனையும், அமுதையும் அனையதீஞ்சொல் ஓர்ந்து ஆனையின் கன்றென பாக்கள் அமைக்கும் ஆற்றல் வாய்ந்த பெரும் புலவர். கேட்டாரைப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழியும் சொல்லாற்றலுடைய தோன்றல் என மொழிந்தார்.

திரு. இராமசாமிச் செட்டியார் அவர்கள், என் முன்னவன் பெற்ற செல்வன் அடியனேன் பெற்றதே. எனத் தனக்கும் பண்டிதமணிக்குமுள்ள கிளை முறையினை எடுத்துக் காட்டி, M. "எம்" கதிரேசரே எனப்பேசினர்.

திரு. வெள்ளைவாரணர் :—செல்வச் சூழலிலே தோன்றிய இவர், செல்வந்திரட்ட விழையாது, இளமையில் பெரும்புலவர்களுடனுறையும்பேற்றை யின்பமாகக்கருதி வாழ்ந்தார். தம்மைச் சூழ்ந்தார் எல்லாம், செல்வம், கல்வி, சேர்ந்தாராய் விளங்கச் செய்யும் அவர்கள் பயின்ற முறையறிந்து, நாமெலாம் கற்க எடுத்துக்காட்டாய் விளங்குகிருர் எனப் பேசினர்.

திரு. இலக்குவனர்:-செயற்கரிய செய்தாரையும்பெறற்கரிய பெற்றூரையும் பாராட்டல் மரபு. அரசியலார் வழங்கிய பட்டம்

இவர்கள் தகுதிக்கு மிகக்குறைந்தது. அரசியலார் இவ்வளவு காலந் தாழ்ந்தாவது, இப்பட்டம் வழங்கியமைக்குப் பாராட்ட வேண்டும். வடமொழி ஆரியர்க்கே யுரித்து என்ற தவருன எண்ணத்தை யொழித்து, வடமொழி வல்லாரோடு அளவை முறையில் சொற்போர் ஆற்றவல்லபேரறிஞர் எனப் பேசினர்.

சங்க அமைச்சர்; இவரின் தனித்த வாழ்க்கையும் புலமை வாழ்க்கையாகவேயுள்ளது. பண்டிதமணியவர்களின் பெருமைகளையும், திறனையும் எடுத்து விளக்கி, கிரேக்கப் புலவன் எரிபிடிஸ், பண்டித ராசா சகந்நாதகவி முதலியோருடன் ஒப்பிட்டுக் காட்டி, ''முருகிற் சிறந்த கழுநீரும், முதிரா இளைஞர் ஆருயிரும், திருகிச் செறுகும் குழல் மடவார் போன்றும் பலர் உள்ளத்தைச் கொள்ளைகொண்டவர்; யாவருடனும் பழகி, அவர் உள்ளத்துறையும் பண்புடையார் எனப்பாராட்டிக் கூறினர்.

திரு. குமாரவீரையர்:— கொஞ்சு கிளியன்ன மொழியின் சொல்லுடன் பேசும் பெரியர். யாவர்க்கும் கதியாக இருப்பவர் கதிரேசச்செட்டியார். செட்டிநாட்டில் பலசங்கங்கள் தோன்றுவதற்குக் காரணமாய் இருந்தவர்.

திருமிகு. பண்டிதமணியவர்கள்:— பிறர் நன்மை பேணுங்கால் நாணமுண்டாக வேண்டும். இங்கு பேசியோர் யாவரும் யானேயாகலின், நாணமின்றிஏற்றுக்கொண்டேன். ஓராண்டின் பின்னும் நினைத்துக்கொண்டேயிருந்து, பலர் பாராட்டுதற்குரித்தானவனுகியதற்காக மகிழ்கின்றேன். தமிழவேள் இல்லாதது பெருங்குறை, நாட்டார் என்னைக் கண்ணுடியாகக் கொண்டு, தன்னைப்பார்த்தார்கள். 'இரண்டுமிலித் தனியனேற்கே'' எனச் செல்வச்சிறப்புப்பெற முடியாமை கண்டு, கலைச்செல்வத்தை வளர்த்தேன், யாவரும் பிற மொழிகளைப் பயின்றால் தமிழின் மேன்மை புலப்படும். என் மனமார்ந்த நன்றியை மிக்க மகிழ்வுடன் அன்பர்களுக்குச் செலுத்துகின்றேன் என விடைதந்தார்.

தலைவர் பின்னுரை

இராமனின் முடிசூட்டு விழாவைத் தத்தமக்குற்றதென அயோத்திமக்கள்களித்ததுபோல் யாமும்களிக்கின்ரேம். செட்டிநாட்டரசர் கல்விச்செல்வம் விளைவித்தபெருமை இவருடையதே. இவர்கள் நீண்டகாலம் வாழ்ந்திருக்க எல்லாம்வல்ல இறைவனை வேண்டிக்கொள்கின்றேம் என்றனர்.

இவ்வாருக, இப்பாராட்டுவிழாவினைச் சிறப்பித்துப் புலவர் பலர் கூறினர்கள். அமைச்சர் நன்றி கூறலுடன், விழா இனிது நிறைவேறியது.

(தொடரும்)

வள்ளுவர் குறளும் தமிழ் நூல் மரபும்.

பேராசிரியர் திரு. S. சோமசுந்தரபாரதியாரவர்கள் M.A., B.L., பசுமலை.

பகுதி (ii)

குறள் தமிழ் முதனூலா, தருமசாத்திர சாரத்திரட்டா?

இனி, குறள் தமிழ் நூலன்று, வடமொழி நூல்வழி வந்தது என்பதற்குக் கூறப்படும் இரண்டாமேதுவைச் சிறிதா ராய்வோம். குறள், வடமொழி கலவாத் தனித்தமிழ் நூலென் பார் ஒரு சாரார்; அது வைதீக தருமசாத்திரவடியே என்பார் பிறிதொரு வகுப்பார், இவ்விருவர் கூற்றும் மெய்ம்மையின் இருதலை மலைவார் பொருள் கருதாமல் தருமுரைவகையாம். வடமொழிச் சொற்களும் வடநூற்கருத்தும் ஒருசில குறளில் வருதலினலது தமிழ்நூலாகாதென்னும் வாதம், மொழிபெயர்ப் பொன்றைப் பெயராதெழுதுமொழியாலே முதனூலென்பது போல, முழு மெய் தழுவார் வடியாக்கிளவியாகும். வள்ளுவர் குறளில் வடசொல் ஒரு சில வருவது மெய்யே; அதன் ஆழ்ந்த பொருட் பெருங்கடலில் சில சிற்றிலையின் எதிரொலி வடநூலில் கேட்பது முண்மை. இவை குறள் தமிழ் நூலின்றெனக் காட்டு மேதுவாமா? வேறுபட்ட நாகரிக வகுப்பார்தம் கூட்டுறவால், நாளடைவில் சில சொல்லும் கொள்கைகளும் இருதிறத்தார் மொழிகளிலும் கைம்மாறிக் கலப்பதியல்பு; கலப்பற்ற கூட்டு றவே வியப்பாகும். வந்தேறி வடசொற்கள் குறளில் ஒருசில புகுந்து வழங்கக் காண்போம்; அதுபோல, தமிழ்ச் சொற்கள் வடமொழியிலிடம் பெற்று வழங்குவதும் மறுக்கவொண்ணு உண்மையாகும். சமயமதச் சார்புகளில் தமிழரிடையமையாத சாதிபேதமாய வாத வடசொற்கள் தமிழிலேறில், ஆணி, முக்தம், பிரவாளம், நீரம், மீனம், போல்வ பலசொற்கள் தமிழ் ஆரியத்திற்களித்த கொடை அறியாதார் அறியாதாரே.

2. பல்வேறு மக்கள் வாழ்வில், பொதுவான வழக்கங்கள், கொள்கையோடு கருத்துக்கள் ஒத்திருத்தல் இயல்பாகும். சிறப்பியல்கள் பற்றிய சிற்சில துறையில்மட்டுமவை வேறுபட நேரக்கூடும். அறம் பலவும் அனைவருக்கும் மக்களியலொற்று மையால் ஒத்திருக்கும் எண்ணரிய பல்வேறும் உயிரினத்துள் மாந்தரெல்லாம் ஓரினமே. உருவத்திற்போல, உள்ள உணர்ச்சி எண்ணம், விருப்பமொடு பசி காம வினைமைகளில் மக்கட் டன்மை என்னுமொரு பொதுவியல்பை மாந்தரிடை எங்கும்

காண்போம். ஒத்த இயலுடைமையினுல் வாழ்க்கைமுறை ஒழுக்கவகை பெரும்பாலும் ஒத்திருக்கும். அதனுலே, பொதுவாகப் பலவேறு மொழிகளிலும் நூல் கூறுமறம் பலவும் பெரும்பாலும் ஒத்திருக்கும். பொய்யாமை, கொல்லாமை, வெஃகாமை, கள்ளாமை போல்வ பல ஒழுக்கறங்கள் எல்லார்க்கும் எஞ்ஞான்றும் எந்நிலத்தும் பொதுவாகும். அதனுலே பல்வேறு மொழிகளிலும் அறநூல்கள் ஒத்துரைப்பதியற்கையாகும். அது கொண்டந்நூல்கள் ஒன்றிலிருந்தொன்றிரவல் கொண்டதென்றும், அவற்றிடையே தொடர்பிருத்தல் வேண்டுமென்றும் கூறுவது தவருகும், எல்லார்க்கும் பொதுவின்றிச் சில வகுப்பார் சிறப்பொழுக்க வழக்கத்தால் அமையுமறவகை கூறுமிரு நூலும் சான்றின்றி ஒன்று பிறிதொன்றற்கு முதலென்று கொள்ளுவதும் குற்றமாகும். சிறப்பொழுக்கம் பற்றி யெழும் அடி அறங்கள் ஒத்தமையக் கூறும் நூல்கள் காணுங்கால் அவற்றினிடைத் தொடர்புண்மை ஆராய்தற் கிடனெருகால் இருக்குமென எண்ணல் கூடும். அதற்கெதிராய் அடிப்படையாம் ஒழுக்கறமும் வாழ்க்கை முறைமரபுகளும் மாறுபட வகுக்கும் நூல்கள். வேறுபடும் நாகரிகம் விளக்கு தனி நூல்களெனக் கொண்டவற்றை உறழாமல் ஆய்வதுவே அறிவறமாம்.

3, இவ்வுண்மை மறவாமல் உளத்திற்கொண்டு, தமிழ்க் குறளை வடதரும நூல்களொடு ஒத்து நோக்கி, இயைபு முரண்பாடுகளை நடுநிலையில் ஆராய்வோம். வள்ளுவர் நூல், வேத சாரம்; பலதரும சாத்திரத்தின் தெளித்தவடி என்பவரின் ஏதுவொடு சான்றுகளைத் தகவோடு நிறுத்துண்மை தேர்ந்து தெளிவோம்.

அகம் புறமென்றிருவகையாய்ப் பொருளொன்றைத்திணை துறைகள் வகுத்துரைத்தல் தமிழ்மரபு. அதற்குமாருய், வள்ளுவர் நூல், அறமுதலாப்பால் வகுத்து வடவழக்குத் தொடர்புடைமை காட்டுதலால், தமிழ் முதனூலாகாதென்பதன் உண்மை இனி விரித்திங் காராய்வோம். அறங்கூறக் காஞ்சி வாகை பாடாணின் துறைவகைகள் தமிழ் வழக்கிலென்றுமுண்டு. அறமெல்லாம் புறத்திணையிலடங்கி விழுப்பொருள் வகையாம்; பொருளின்பத்துறையியலாய்ந்துரைப்பதறம். பொருளொன்றே வாழ்வொழுக்க முறைபற்றி அகம் புறமென்றிரு வகையாய், அறமுதல் நாற்பொருளடங்க அமையுமுண்மை தமிழர்கண்ட மரபாகும். அது குறையென்றிகழ்ந்து நாற்பால் நெறி கூறின், முப்பாலென்றுரைப்பாரோ ?

தமிழக்குறளை முப்பாலாய் வகுத்தவர் வள்ளுவர்தாம் என் என்பதற்குச் சான்றில்லை. "முப்பால்" என்றிறவாத குறளுக்குப் பெயரவர் முன்னிடவில்லை. பண்டைச் சான்றோர்

பாக்களைத் தொகுத்த பிற்காலத்தவர், தாமியற்றிய குறட் சிறப்புப்பாயிரத்தால் அப்பொருணூலை அறனூலாக்கி முப்பாலாய்ப் பாராட்டி ஆரியரின் நாற்பொருளும் கூறுமென ஓதி வைத்தார். வள்ளுவமாலை இறந்தபல புலவர் பெயரால் மெய்மறந்த பிற்காலத்தொரு புலவன் புனைந்த **பெருமாய்மாலப் பேய்க்கதை** என்பதை அப்பாட்டுக்களே குழறும். அதனுண்மையாராய்ந்து கட்டுரை முன் எழுதியுளேனாதலினிங்கதனை விரிக்க வேண்டேன். பெயர் கூறத்துணியாத பிற்காலத்தார் கதை, வள்ளுவர் முன் தமிழ் மரபு கொள்ளாமற்றள்ளிவிட்டு, வடவழக்கால் பாலமைத்து நூலியற்றிவைத்தார் என்றுரைப்பதற்கு சாலுமறச் சான்றுமா?

4. மேலும், வள்ளுவர் நூல் முழுவதுமே அகம் புறமாய் அமையாதோ? அறம் பொருளென்றிருபாலாக வழங்கிவருங் குறளனைத்தும் நல்லதமிழ்ப் புறப்பொருளே கூறுமன்றோ. அறத்துப்பாற் குறளெல்லாம் அளத்தலாகாப்பொருளாகாவோ? பொருட்பாலாய் வகுத்த குறட்பாவெல்லாம் திறம்பாத அறப் பிழம்பை வடித்தொளிரு மணிகளன்றோ? "அறனீனும், இன்பமுமீனும்..........பொருள்" என்பது வள்ளுவர் வாய்ச்சொல் லன்றோ?. இன்பமும் பொருளும் அறனும் என்றுங்-கன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கு" எனத் தமிழ்நூல் கூறுமுண்மையோடிதனை ஒத்து நோக்குக. மக்கள் மதிப்புக்குரியன யாவும் பொருளாகும். அறமும், பொருளும் அவர் மதிப்பனவால், அவையும் பொருளே. பொருளாகா அறத்தை நினைத்தல் கூடுமோ? ஆரியரறத்தில் பொருளடங்காது; இன்பமும் அடங்கா. தமிழர் பொருளில், இம்மை இன்பமும் அறனுமன்றி மறுமைப் பேறும். வீடுமடங்கும். பொருளை அகம் புறமாகத் தமிழ் நூல் வகுக்கும், மக்கள் வாழ்வின் இயலிருவகையோடியைவதற்காக. குறட் பெருநூலில், அறமும் பொருளும் புறப்பொருளாகும்; காமப்பகுதி அகப்பொருளாகும். அறிவுடை உலகில் நெறிபிறழாதார் அனைவரும் போற்றும் வள்ளுவர் நூலை வடநூல் வழக்கோடியைபுற வகுத்து நிறுத்த முயன்றோர் கருதிய பயன் முற்றும் பெற்றிலர். ஆவைப்புலித் தோல்போர்த்து நிறுத்தினும்ஆவியலாங்கே தோன்றுதொழியா; கொம்பும் குழம்பும் வம்பப் புலியின் பொய்யுருவிளக்கும். கொடுநெடும்பல்லும், கூருகிரின்மையும், கொழும்பால் மடியும் ஆவியல் குறிக்கும். குறளை வடநூன் மரபால் வள்ளுவரியற்றின் பேரா இன்ப வீட்டியல் விடுத்து முப்பாலாக்கி முடியாரன்றோ? "வீடு" சிந்தையுமொழியும் செல்லா நிலைமைத்தாதலின்......நூல்கள் கூறுவன ஏனையமூன்றே" என்னும் பரிமேலழகர் கூற்றுண்மையெனின், உபநிடதம், வேதாந்த சூத்திரம், கீதை போன்ற நூல்

களும், மீமாம்சம் முதலிய சாத்திரங்களும் வேதமுமே வடமொழியில் கூறும் பொருளென்ன?

வீடுதேடித் தேவபாடையும் ஆரியர் சிந்தையும் செல்ல வல்லது சூத்திரர் தமிழில் சொல்ல வொல்லாதெனில், திவ்வியப் பிரபந்தமும், தேவாரங்களும் கூறுவனவென்ன? மக்களறிவே செல்லாதாயின், வீட்டை விரும்பி நினைக்கக் கூறுதல் மடமை. வள்ளுவர் தமிழ்நூல் வழக்காற் குறளை அகம்புறமாக அமைத்தனராதலின், அறம்வேறு பிரித்த அருந்திறலோர்க்கும் அதில் வீடு நுழைக்க ஒல்லாதொழிந்தது.

5. இனி, தம்மவர் முன்னே முப்பாலென்றதைத் தாமே தப்பெனக்கூற ஒல்கி தாமெது கூறினும் தமிழர் தள்ளார் என்று நினைத்து, வள்ளுவர் நூலும் வீடுகூருமல் "ஏனைய மூன்றே" கூறினதாகத் துணிவுடனுரைத்தார் பரிமேலழகர். ஆனல், வள்ளுவருக்குப் மாமாலை சூட்டிய பெரியார், வள்ளுவர் குறளில் நாற்பொருளும் நவின்றுளரென்று வற்புறுத்துவர். "அறம், பொருள், இன்பம், வீடென்னும் நான்கின் திறம் தெரிந்து செப்பிய, தாய் மாமூலர் பெயராலும், "ஆறு அறமுதலா அந் நான்கும்.........ஊழினுரைத்தாற்கு" என நக்கீரர் பேராலும், "அறமுதனுன்கும் அகலிடத்தோரெல்லாம், திறமுறத்தேர்ந்து தெளியக்—குறள் வெண்பாப் பன்னிய வள்ளுவனார்" எனக் கோவூர் கிழார் பேராலும் "மும்மையின், வீடவற்றினுன்கின் விதிவழங்க வள்ளுவனார், பாடினரின் குறள் வெண்பா" என இழிகட் பெருங்கண்ணனார் பெயராலும், "இன்பம், பொருள், அறம், வீடு என்னுமின்னுன்கும், முன்பறியச் சொன்ன முதுமொழிநூல்......குறள்" என நரிவெரூஉத்தலையார் பெயராலும், வள்ளுவமாலை பறையடிக்கப் பார்க்கின்ருேம். அப்படியிருக்க, குறளை நாற்பொருட் சாத்திரம் என்னுமல் முப்பால் என்பது முற்றிலும் குற்றமாம். உண்மையாதெனில் அகப் புறப் பொருள்களை அழகாய் விளக்கும் தமிழ்ப் பெருநூலை, ஆரியர் புருடார்த்த நூலாக் கமுயன்றோர், "நுனிக்கொம்பர் ஏறினர் அஃதிறந்தூக்கி உயிர்க்கிறுதி" எய்தல் போல, நாற்பொருள் காணுமல் இடைமுரிந்து, முப்பாலாக்கி முடித்தார். முப்பால் கூறல், வடநூல் முறையில் வழங்காப் புதுமை; தமிழ்ப் பழமரபு தழுவா முறிவு. இருமொழி வழக்கும் இகழும் பிழையை ஏற்றுவதன்றி, முப்பால் வகைமை எப்பாலானும் குறளுக்கு ஏற்றம் தராது.

(தொடரும்)

தமிழ்த்தாய் திருப்பணி

ஆசிரியர், திரு. அ. வரதநஞ்சையபிள்ளையவர்கள், தோரமங்கலம்.

உலகத்து உயர்பிறப்பெய்திய மக்கள் இன்புற்று வாழ்வதற்கு வேண்டிய பலவற்றையும் உதவற்கேற்ற சிறப்புடைக் கருவிகள் இரண்டே. அவை (1) கல்வி (2) செல்வம், என்பன. இவை முறையே உடலைப்பேணும் உயிரும், அதனைத்தாங்கித் தானும் மதிப்புறும் உடம்பும்போல ஒன்றையொன்று இன்றியமையா இயற்கையோடு அவாவிநிற்பன. உயிரில்வழி உடம்பும் உடம்பொடு கூடாக்கால் உயிரும் பாடழிந்து பயன்படா. அஃதேபோல கல்விபெறுவழிச் செல்வமும், செல்வத்தோடு கூடாக் கல்வியும் பெருமைகுன்றிப் பயன்கெடுதலானும், உடலினும் உயிர் சிறந்தாற்போன்று செல்வப் பொருளினும் கல்விப் பொருள் ஏற்றமுடைத்தாகலானும் உயிர் அழிவில் பொருளும், உடல் அழிபொருளுமாதலை ஒப்பவே "ஒருமைக்கட் டான்கற்ற, கல்வி யொருவற் கெழுமையு மேமாப் புடைத்து." என்றமையின் கல்வி அழிவுறுமையும், "அற்கா வியல்பிற்றுச் செல்வம்" என்பதனுல் செல்வம் அழிதலும் உடைமையானும், யாம் கூறிய உவமம் சாலப்பொருந்துமாறு அறிக.

இனி இவ்வுவமையையே ஒரு நாட்டிற்கும் அந்நாட்டிற்குரிய தாய்மொழிக்கும் பொருத்தி, நாடு உடலையொக்கும், அம்மொழி உயிரை நிகர்க்கும் எனக் கொண்டு நோக்குவாம். உடல் கட்புலனுகும் உருவிற்று. நாடும் அத்தகையது. உயிர் கட்புலனுகா அருவப்பொருள். மொழியும் அத்தகைய நுண்பொருளே. மாயாகாரியமாகத்தோன்றி (அருவமாகியவானின் குணமாம் ஓசைவடிவாதலின்.) உயிர் உடல் முழுதும் பரவிநிற்பது. அங்ஙனமே மொழியும் நாடுமுழுதும் நிறைந்துறைவது. (ஈண்டு நாடு என்றது நாட்டுமக்களை என ஆகுபெயர் வகையாற் கொள்க.) உயிர் ஏவியவாறு வினைபுரிந்து உடல் வளமுறும். அவ்வாறே மொழி வளர்ச்சி பெருகி அறிவுகாட்டிய வழிச் சென்று நாடும் மேன்மையுறும்.

மெய்யறிவுடையீர்! இவ்வுண்மையை நுங்கள் உளக்கண்ணுல் நோக்குங்கள்! ஒரு நாட்டின் முன்னேற்றம், சீர்திருத்தம் பெற மக்களை மேலாய நன்னிலைமைக்கு ஊக்கும் அருஞ்செயல்கள் இவை எங்கிருந்து முளைக்கின்றன? கருதிக் கூறுமின்! நாட்டின் முன்னேற்றத்திற்கெனத் தம் உடல்

பொருள் ஆவிகளை ஒருங்கு வழங்கும் வீரவள்ளல்கள் அம் முன்னேற்றத்தின் ஆணிவேர் இது என என்னே அறிந்திலர்? ஏனோ இதனை இழித்தனர்? பலதாயர் புடைசூழ்ந்திருப்பினும் ஒருமகவுக்குப் பெற்றதாய்போற் பரிவு சிறந்தாராவரோ? ஆகார், ஆகார், ஆங்கே, எத்துணை நன்மொழிகள் இடை கலப்பி னும் தமது தாய்மொழிபோற் பயன்தரா. இஃது முக்காலும் உண்மை என ஐயமின்றிக் கொள்ளத்தக்கது. நம் கண்முன் செல்வம் செருக்கித் தலைநிமிர்ந்து நிற்கும் பிறநாடுகள் அந்நிலை மையை எதனுல் அடைந்தன? கூர்த்தறிமின்! முதற்கண் தம் தாய்மொழியை நாடுமுழுவதும் பரவவளர்த்து, உயிரினும் மிக்க அன்புடன் போற்றி, வேறு பன்மொழிகளின் நூற்கட்பொதிந்து கிடந்த அரிய உண்மைகளைத்துருவிக்கண்டு அவற்றைத் தம் தாய்மொழியிற் பொன்னேபோற் சேர்த்துப் புதிய பொருள்கட் குத் தம் மொழிக் குறியீட்டுப் பெயர்படைத்துக் கூட்டி இயற் கைப் பொருட்கூறுகள் ஒன்ரூடொன்று கலப்பதால் தோன் றும் வியத்தகு காட்சிகளைப் பயன்பெறச் செய்கையால் உரு வாக்கிப் பல பொறிகளைச் செய்து விலைப்படுத்துப், பெற்ற பெருஞ்செல்வத்திரளன்ரூ அந்நிலைமையில் அவர்களை உய்த்து மேன்மை தந்தது. தாய்மொழி வளர்ச்சியற்ற எந்நாடேனும் நன்னிலைமையை முன் எக்காலத்தேனும் அடைந்ததுண்டோ? நெஞ்சிற் கைவைத்துரைமின்! இல்லை இல்லை என்பது தவிர வேறு கூறமாட்டீர்களென்பதறிவேன்.

இதுகாறும் விரித்துரைத்தவற்றின் சுருக்கம் தாய்மொழி வளர்ச்சியின்றி ஒருபோதும் நாடு மேன்மையுறமாட்டாது என்பதே.

இனி நம் நாட்டை நோக்குவோம். நடுநிலை நெஞ்சால் உலகமொழிகளோடு நம் தாய்த்தமிழ்மொழியையும் ஒப்பிடு வோர்க்கு இம்மொழி ஏனை எம்மொழிகட்கும் குறைந்த தொன் றன்றென்னுமுண்மை புலனும். உயர்தனிச் செம்மொழிகளின் வரிசையில் நம்மொழியும் விளக்கமுறத் தோன்றும் பெருமை வாய்ந்ததே. ஆயினும் என்? இதன் பண்டைக்காலப் பொலி விற் பெரும்பகுதி அழிந்துசிதைவுற்றிருக்கின்றமையின் இக் காலத்துக்கேற்றவகையிற் றிருத்தமுறப் புனைதல்வேண்டும். இந் நாடு பிறநாடுகளேபோற் சிறந்து விளங்கவேண்டுமென விரும்பு வார் யாவரும், அச்செயற்கு அடிப்படையாக அமைந்துள்ள தாய்மொழியைப் பல்லாற்ருனும் பலகலைகளானும் ஓங்குமாறு அரும் பெருந் தொண்டாற்ற முற்படுதல் வேண்டும். இதுவே **தமிழ்த்தாய் திருப்பணி** என யாம் எடுத்துக்காட்டியது.

பன்னெடுநாட்களாய் எம் உள்ளத்தில் ஆணி தைத்தாற் போல உறுத்திவந்த இக்கருத்துக்களை மேற்கூறிய பெயர்தந்து ஓர் நூலாக இயற்றி வருகின்றேம். இந்நூலில் உரைக்கப் பெறும் பொருட்களில் சிலவற்றைத் தமிழுலகுக்கு முன்னறிவிப் பாக எடுத்துக்காட்டுவாம்.

"பலவகைய சொன்மலர்கள் பாரித்த பொருண்மணத்தால்
நலமிகுந்து சுவைபழுத்து நல்லறிவுத் தேன்துளும்பும்
அலகில்புகழ்த் தமிழன்னை யருமைப்பா டுளங்கொள்ள
நிலைகொள்ளா னவளடியை நேர்கண்டு வணங்குவல் யான்."

எனச் செல்வானோர் தமிழ் மகன். தமிழன்னையின் திருவோலக் கம் கண்ணுறுகின்றான். ஆங்கு

"வீரஞ் செறிந்த மறவர்தொழில் வீற்று வீற்றுத் தனித் தோன்ற
வாரம் படைத்த காட்சியவாய் வயங்கும் புறமா மதிலேழும்
நாரின் மலிந்த தலைவனுடன் தலைவி நயக்கும் நற்றுறைகள்
நேரொன் றில்லா தமைந்தவக மதிலோ ரேழும் நினைப்பரிதால்

என அத்தமிழரசியின் புறப்பொருட் பகுதிகளாம் ஏழ்புற மதில்களையும் அகப்பொருட் பகுதியவாம் அகமதில்கள் ஏழனை யும் கண்டு வியந்து முன் செல்கின்றான், மீளவும்,

"கண்ணுக்கடங்கா கருதுநெஞ்சம் தமதாய்க் கொண்டு களிப்பேற்றி
எண்ணற்கறிவு தலைநிமிராதீர்த்தே யுவகைக்கடலழுத்தும்
வண்ணத்தனநல் லிசைப்புலவர் மலர்வாய்த்தோன்றி மணமாருச்
சுண்ணப்பொழில்க ளேயோஇத் தூயசங்கத் தமிழ்நூலே"

எனப்பழஞ் சங்கவிலக்கியங்களாம் சோலையின் நலங்காண்கின் றான். பின்னர்.

"வயிறுநொந்து பெறுதுபெற்று மடிமேல்வைத்து முகநோக்கி
உயவுதீரத் தன்முலைப்பால் விரலாலதுக்கி உணவூட்டிச்
செயிர்தீர்மழலை பயிற்றியென்னைத் தினமும் வளர்க்கும் சீமாட்டி
அயர்வுநீங்கப் பண்ணையாயத் தாடுமிடமோ காப்பியங்கள்"

எனகாப்பியங்களின் நலமறிந்து வியக்கின்றான். அப்பால்,

" அழிந்து மண்ணும் பொன்மணிக ளவற்றுற் புனைந்தவல
அம்மா
சுழிந்தவடிவி னுருக்காட்டு மெழுத்தாற் றொடருஞ் சொற்
குறிப்புப்
பொழிந்த பொருட்கள் பரவமிளிர்ந் தறிவையின்பப்
புணரியிற்றோய்த்
தெழுந்தன்மையபல் காப்பியமும் என் தாய்க்கினிய
செய்குன்றே ',

எனப்பல சிறுகாப்பியங்களைத் தன்தாயின் விருப்பமிக்க செய் குன்றங்களாக நினைக்கின்றான்.

இங்ஙனம் தமிழ் நயங்களைப் பலபட விரித்துப்பாராட்டித் தமிழன்னையின் திருவடியை வணங்க அவள் வாழ்த்தித்தழுவ மகிழ்ந்து அவள் நிலைமையை நிமிர்ந்துநோக்கி

" அறிவுசிறிது மில்லேனை யான்றகேள்வி யறிஞர்குழாம்
நிறையுமவையுட் புகநூக்கி நிறுத்துங் கருணைப் பெருஞ்
செல்வீ !
மறையும்பரிதி யந்தியொப்ப வொளிபுறக்கென்ற வாறென்னே?
இறையுங் குன்று முழுமதியை நகுநின் முகத்தினிடரேதோ ?

துன்பக்கண்ணீ ரலைத்தொழுக வெச்சென்றொருபாற்றொடர்ந்
தொருபா
லின்பக்கண்ணீர் கடைவழிந்து தண்ணென் றிருக்குமீ
தென்னே?
நின்பற்கவைஇய பவளவிதழ் முனிவாற்றுடித்தும்
நேர்மலர்ந்தும்
நன்பொற்பாவாய் துன்பவின்ப மொருங்கே தோற்றும்
நாட்டமென்னே?

என அவளது கவலையும் களிப்பும் ஒருங்குதோன்றும் நிலையை வினவிக் காரணமறிகின்றான்.

அவள் மொழிகின்றனள்.

செய்யா கூறிக் களத்தலென்று மறியாநாவிற் செழும்புலவர்
எய்யாதாருந் தமிழ்ச்சுவையுண்டிருப்பவுதவும் வண்மையினர்
பொய்யாவுளத்தைச் செய்கையினுற் புலனுக்கிற்கும்
புனிதர்பலர்
ஐயா முன்போற் பலரிலரென் னுக்கங்கருதிப் பணிபுரிவோர்.

நேற்றுத்தோன்றும் பிறமொழியாம் பேதைமாரென் நிலை
நோக்கி
ஆற்ற இளித்து நகைக்கவுளம் நாணுற்றுலைவேன் ஆங்கவர்
தாம்
ஏற்ற புதியகலை மின்ன நடப்பார் பழைய என்கலையும்
போற்றலின்றி மிகப்பொல்லம் பொத்துந்தகைத்தாய்ப்
போயிற்றால்

என்ற னினிய மொழிச்சுவையை ஏலார் வேறோர் கருத்தானே
துன்றுங் கனலி னிடச்சூழ்வார் தூய்மை செயல்போல்
நல்லனவும்
குன்றச் சிதைத்துத் தாங்கருதுங் கோட்பா டணைத்துமிடைப்
புகுத்து
வென்ற பெருமை தமதென்பார் யார்கேட்டிதனை விலக்குவார்.

அற்றைநாளிற் கடல் கோளாலந்தோ வென்ற னருங்கலைகள்
முற்ற ஒழிந்த சில பேணிவைத்தேனவையென் மொழிதேருப்
பெற்றிக் குருடர் தமக்கேதும் பயன்படாவாம் பெயர்த்தும்
நான்
இற்றை நாளுக்கேற்ற வணியுவப்பேன் தருவோரிலரையா !

"முள்ளாரிடுகாட்டிடத் தரிதின் முளைத்த நறுஞ் சந்தனமரம்
போல்
பிள்ளா யெனது வயிற்றுதித்த பேதைக் குருடர் குழாத்திந்நாள்
விள்ளாவன்பு நிரம்பவென தேற்றங்கருதி விரைந்துஞற்றும்
தள்ளாப்பெருமைச் சிலருளர் காண தனுலாவி தாங்குகின்றேன்"
என்றிவ்வாறு தன் துன்பச் செய்திகளை யெல்லாம் உரைப்ப,

" தஞ்சையிடைக் கரந்தைவளர் கழகம் போலச்
சங்கங்கள் நினதுவெற்றி தழைப்ப வார்க்கும்,
நெஞ்சுதட்டித் தோணிமிர்த்து நின் சீர்பாடி
நிற்குமக்கள் பலர்தோன்றிப் பெருகுகின்றார்,
அஞ்சலுன தேற்றத்திற் குதவேமென்னி
லாருயிரைத்தாங்கி யயாம் அடைபேறின்றால்,
விஞ்சியெழும் அவா வரம்பு கடந்து பொங்க
விரகறிந்துன் பணிபுரியவிரைகின்றோமே"

" இல்லை நினக்கரியதொன்று தாயே கேட்டி
யெத்திசையு மணந்தபுகழ் இறைவன்கண்டாய்
தில்லையிடைப் பல்கலை நற்கழகம் நாட்டும்
செட்டிநாட்டேந்தல் அண்ணாமலைப் பேர்பூண்ட

நல்லமகன் றனைப் பெற்ருய் நலத்தான் மிக்காய்
நகைப்பவர் யார் நீயவரை நகைக்குங்காலம்
ஒல்லையிதோ அணிமைத்தே சேய்த்தென்றெண்ணே
லுறுதியெனக் கூறி விடைபெற்று மீண்டான்."

அங்ஙனம் மீண்டவன், இக்காலத்துத் தமிழை வளர்ப்பான் முனைந்துள்ள செல்வர்களையும், அவட்கு இக்காலத்துக் கேற்ற வகையிற் பணிசெய்ய வல்லபுலவர்களையும் வரலாற்ருேடு அவ்வவர் செய்யும் தொண்டின் மேம்பாடுகளையும் ஒருங்கெடுத் துரைக்கின்ருன் நம்மிடம் தமிழன்னை விரும்பும் பணிகளை யெல்லாம் வகைபெறக் கூறி முடிக்கின்ருன்.

இங்ஙனம் முற்றுப்பெறும் இந்நூலின்கண் இப்பத்தொன் பதாம் நூற்ருண்டின் பிற்பகுதியினின்றும் யாமறிந்த தமிழறி ஞர் தமிழார்வமிக்க புரவலர் என்றின்னோரை வாயார புகழுங் கடப்பாட்டை ஆற்றினேம். இந்நூல் வெளிவருவதற்குதவிய அறம் பெருகும் அறிஞர்கள் பெயர் பின்வருமாறு :—

(1) மதுரை (துணைத்தண்டற்றலைவர்) உயர்திருவாளர்
C. துரைசாமிக்கவுண்டர் அவர்கள் B. A. ரூ. 20

(2) மயிலம் கோயில் அறநிலையங்களின் தலைவர்
சைவத்திரு சிவஞானபாலையசுவாமிகள்
திருமுன் ரூ. 50

(3) சேலம் உயர்திருவாளர், S. P. ராசமாணிக்க
பண்டாரம் அவர்கள் ரூ. 20

(4) புதுவை. கு. கா. வணிகக்குழுச் செயலாளர்
இராசமாணிக்கம் அவர்கள் ரூ. 10

அச்சுத்தாள்கள் அருமையால் நூல் வெளிவர இயலா தாயிற்று.

"பிழையுள பொறுக்கையெல்லாம் பெரியவர் கடமை போற்றி"
(திருவாசகம்)

"குற்றங்களைந்து குணங்கொண்டு ஏற்றல் கற்ருேர் கடன்"

கருத்துட் டுேங்கிய பகற்கனவாமெனக் கழிய
உரைத்து ரைத்துநா நுனிமழுங் குற்றவை யொழிக
திருத்த மாயினிச் செய்கையிற் காட்டலே சிறப்பாம்
அருத்தி சால்நம தன்னைதன் வேட்கையீ தாமே.

ஆறு பிரத்தியயங்களின் விளக்கம்.

வே. வேங்கடராஜுலு ரெட்டியார், சென்னைப் பல்கலைக்கழக
ஆராய்ச்சியாளர்.

தமிழ்மொழியில் பழைய இலக்கணமாகிய தொல்காப்பியத்தில், அக்காலத்தில் வழங்கிய பாக்களின் வகைகள் கூறப்பட்டுள்ளன. பிற்காலத்திற்றோன்றிய யாப்பிலக்கண நூல்கள் பாக்களையும் பாக்களின் இனங்களாகிய தாழிசை துறை விருத்தங்களையும் பரக்கக் கூறின ; ஆயினும் ஒவ்வோர் இனத்திலும் இத்துணை வகைச் செய்யுட்கள் வரக்கூடும். அவற்றுள் இத்தனை வகை பயின்று வழங்குகின்றன என்று விளக்கமாகக் கூறிற்றில. எடுத்துக்காட்டாக—

'நாற்சீர் கொண்டது கலிவிருத் தம்மே'

என்று கூறியநூல், நாற்சீரடியில் இத்தனைவகை வரக்கூடும் என்றும் இத்தனைவகை விருத்தங்கள் பயில்கின்றன என்றும் உரைத்திலவன்றே ?

இனி, வடமொழிச் செய்யுளிலக்கணங்களை நோக்குவோம். அவை, ஓரெழுத்தடி முதலாக இருபத்தாறெழுத்தடி ஈறுகவுள்ள விருத்தங்களை ஓரினமாக்கி அவற்றிற்குத் தனித்தனிப் பெயரும் இட்டு, அவற்றுள் ஒவ்வொன்றிலும் இத்தனை விருத்தங்கள் வரக்கூடும் என்று வரையறை செய்து, அவை ஒவ்வொன்றிலும் பயின்று வழங்கும் விருத்தங்கட்குப் பெயரும் இலக்கணமும் கூறுகின்றன. இவையல்லாமல், ஒவ்வொரு சந்தசிலும் வரும் விருத்தங்களை வகைப்படுத்துதற்கும், இத்தனையாவது விருத்தம் இன்ன இலக்கணத்ததாயிருக்கும் என்றும் இன்ன இலக்கணமுடையவிருத்தம் இத்தனையாம் விருத்தமாகும் என்றும் விரைவில் அறிந்துரைப்பதற்கும் இலக்கணங் கூறுகின்றன. இத்தகைய இலக்கணமே பிரத்தியயம் எனப்படுகின்றது. அப்பிரத்தியயவகைகளையும் அவற்றின் இலக்கணத்தையும் இங்கு நோக்குவோம், ஆயின், அவற்றை அறிவதன்முன் முதற்கண் வடமொழிச் செய்யுளிலக்கணத்தின் தொடக்கத்திற் கூறப்படும் இலகு, குரு என்பவற்றின் இலக்கணமறிவது இன்றியமையாததாகும். ஆகலின், அதனை அறிவோம்.

குற்றெழுத்து—லகு
நெட்டெழுத்து—குரு

ஆயின், குற்றெழுத்தினை யடுத்து மெய்யெழுத்து நிற்பினும்

கூட்டெழுத்திருப்பினும் அக்குற்றெழுத்துக் குரு ஆகும். எடுத்துக்காட்டு.

அரிசி—இம்மூன்றுங் குற்றெழுத்துக்களாகலின், லகுக்களே
மரம்—இதில், ம—குறிலாதலின் லகு;
ரம்—குறிலையடுத்து மெய்யெழுத்திருத்தலின் குரு
பக்வம்—இதில், பகரத்தையடுத்து 'க்வ' என்னுங் கூட்டெழுத்து இருத்தலின், பகரம் குரு
தேமா—இவை இரண்டும் நெடிலாகலின் குரு

இனி, 'குரு' என்பதனைத் தெரிவிக்க நேர்கோட்டையும், 'லகு' வினைத் தெரிவிக்க வளைவினையும் அடையாளமாக இடுவர். எடுத்துக்காட்டு:—

குரு	—
லகு	ப
குரு குரு	— —
லகு லகு	ப ப

இவவாறே அடையாளமிட்டுக் குரு, லகுக்களை வழங்கவேண்டும். லகுவினை 'ல' என்றும், குருவினைக் 'க' என்றும் வழங்குதல் உண்டு.

இனி, ஓரெழுத்து அடி முதலாக இருபத்தாறெழுத்தடி வரை யுள்ள சந்தசுக்களின் பெயர் வருமாறு:—

ஓரெழுத்து அடியுள்ள சந்தசு			உக்தா
2 எழுத்து	,,	,,	அத்யுக்தா
3	,,	,,	மத்யா
4	,,	,,	பிரதிஷ்ட்டா
5	,,	,,	ஸுப்ரதிஷ்ட்டா
6	,,	,,	காயத்ரீ
7	,,	,,	உஷ்ணிக்
8	,,	,,	அநுஷ்டுப்
9	,,	,,	ப்ருஹதீ
10	,,	,,	பங்க்தி

11	,,	,,	த்ரிஷ்டுப்
12	,,	,,	ஜகதி
13	,,	,,	அதிஜகதி
14	,,	,,	ஸக்வரீ
15	,,	,,	அதிஸக்வரீ
16	,,	,,	அஷ்டி
17	,,	,,	அத்யஷ்டி
18	,,	,,	த்ருதி
19	,,	,,	அதித்ருதி
20	,,	,,	க்ருதி
21	,,	,,	ப்ரக்ருதி
22	,,	,,	ஆக்ருதி
23	,,	,,	விக்ருதி
24	,,	,,	ஸ்ம்க்ருதி
25	,,	,,	அபிக்ருதி
26	,,	,,	உத்க்ருதி

இனி, ஒவ்வொரு சந்தஸிலும் எத்தனைவகை விருத்தங்கள் ஆதல் கூடும் என்பதைச் சிறிது நோக்குவோம்:—

ஓரெழுத்தடியில் 2 வகை ஆகும். உதாரணம்:

1	லகு	ப
2	குரு	—

'லகு' வினுல் ஆய விருத்தம்	'குரு' வினுல் ஆய விருத்தம்
இ	கம்
து	தான்
ல	ரா
கு	மா (கம்—குரு)

இரண்டெழுத்து அடியில் 4 வகை ஆகும்.

1 லகுலகு	2 குருகுரு	3 லகுகுரு	4 குருலகு
பல பப	ராமா	இரா ப—	ஆதி —ப
பல பப	நீயே	மனும் ப—	நாத —ப
வர பப	வாவா	பரா ப—	வாழி —ப
வர பப	காவாய்	பரா ப—	ஊழி —ப

மூன்றெழுத்து அடியில் 8 வகை ஆகும். நான்கெழுத்து அடியில் 16 வகை ஆகும். இவ்வாறே கணக்கிட்டுக் காணலாகும்.

இனி, பிரத்தியயங்களை நோக்குவோம். பிரத்தியயம் என்பது அறிவு என்னும் பொருளது. ஈண்டு அறிவாவது—விருத்தங்களைப் பற்றிய அறிவு. செய்யுளிலக்கணத்திற் கூறப்பட்டுள்ள பிரத்தியயம் ஆறு. அவை: ப்ரஸ்தாரம் (உறழ்ச்சி), நஷ்டம் (கேடு), உத்திஷ்டம், லக க்ரியை (இலகு குருச்செய்கை) ஸங்க்யானம் (விருத்தத்தொகை), அத்வயோகம் (நிலவளவு) என்பன. இவற்றுள் முதலாவதாகிய ப்ரஸ்தாரத்தை நோக்குவோம்:

I பிரஸ்தாரம்

பிரஸ்தாரமாவது—ஒவ்வொரு சந்தஸிலும் வரும் விருத்தங்கள் எவ்வாறு அமையும் என்பதை அறியும் முறை. அஃதாமாறு:

நாம் எந்தச் சந்தஸைப் பிரஸ்தராஞ்செய்ய (உறழ) எடுத்துக்கொள்கிறேமோ அந்தச் சந்தஸில் ஓர் அடிக்கு உள்ள எழுத்துக்கள் அத்தனையும் 'குரு'வாகக்கொண்டு முதல்விருத்தம் அமைக்கவேண்டும். அவற்றை முதல்வரியில் எழுதிக் கொள்ளவேண்டும். அதற்குக்கீழ் இரண்டாம் வரியை (இரண்டாம் விருத்தம்) எழுதும்போது, மேல்வரியில் முதலிலுள்ள குருவிற்கு நேராகக் கீழே லகுவினை எழுதவேண்டும்; மற்றவை மேல்வரியில் இருப்பதுபோலவே எழுதவேண்டும். இவ்வாறே அதன் கீழ்வரியை எழுதும்போது, மேல்வரியில் முதலிலுள்ள 'குரு'விற்கு நேர்கீழே லகுவும் அதன் வலப்பக்கம் மேல்வரியிலிருக்கும் எழுத்துக்களையும் எழுதவேண்டும். எந்தவரியிலாயினும் இடப்பக்கம் வெற்றிடமாகவரின் அங்குக் 'குரு'வினை எழுதவேண்டும். இவ்வாறு ஒவ்வொரு வரிக்குங்கீழ் எழுதிச் செல்லுமிடத்து எல்லாவெழுத்துக்களுங் குறிலாய் வந்து சேரின் அதனேடு நிறுத்திவிடவேண்டும். பிரஸ்தாரஞ் செய்தால் ஒவ்வொரு சந்தஸிலும் முதல்விருத்தம் எல்லாவெழுத்துக்களுங் 'குரு'க்களாலாகிய அடியினதாயும் கடைசிவிருத்தம் எல்லாவெழுத்துக்களும் 'லகு'க்களாலாகிய அடியினதாயும் இருக்கும். இனி, இதற்கு மாருக எல்லாவெழுத்துக்களும் லகுக்களாலாகிய அடியை முதலில் எழுதி, குருக்களாலாய வரியோடு நிறுத்தலாம். எவ்வாருயினும் விருத்தத்தொகை ஒன்றேயாகும்.

(தொடரும்.)

" தமிழ்ப்பொழில் சேர்க்கை "
19—5—சுபானு, ஆவணி.

திருவாளர்

திரு. வி. கலியாணசுந்தரமுதலியார் அவர்கள்.

உலகம் எங்கணும் ஒருங்குவந் தேத்தும்
உள்ளம் பெரிய உரவோன்! நங்கள்
செந்தமிழ்த் தாயின் செல்வமாம் மைந்தன்!
இல்லோர் புன்கண் இரிந்திட உழைப்போன்!
பெண்மையின் மேன்மை பிறங்கிடச் செய்வோன்!
நாட்டின்நற் றெண்டே நல்லுரு வாயவன்!
மொழியின்நற் றேண்டே முன்னிய உருவினன்!
சமய வாழ்வெலாம் தழைத்திடச் செய்வோன்!
உலகிய லுணர்ந்த நிலவுறு மதியினன்!
பெரியோர் இவரெனப் பிறங்கும் பண்பெலாம்
ஒருவடி வுற்றேன்! உவன்சீர் உரைத்தலென்!
சொல்லார் திரு. வி. கல்யாண சுந்தரன்
என்னின் உலகெலாம் இனிதேத் துதற்கு
நாளிதன் செய்தித் தாள்களே சான்று: இவன்
ஆறுசேர் பத்தாம் ஆண்டென என்றும்
பேறெலாம் மேவிப் பெரிதுவா ழியரே!

தமிழர்களின் ஆக்கமே நோக்கமாகக் கொண்டு வாழ்க்கை நடத்தும் பெருமக்களுள் நம் திரு. வி. க. வும் ஒருவர். இவர் இளமையிலேயே தாய்மொழிப்பற்று மிக்கவராய்ப் பள்ளிப் படிப்புடன் நிற்காது தமிழினை முறையாகப் பயின்றவர். சிறந்த சொற்பொழிவெனில், பிற அலுவல்களை மறந்து அவண் சென்றிடும் நிறைந்த கேள்வியர். ஆங்கில மொழியறிவும், கணக்கறிவும் வாய்க்கப் பெற்றவர். வணிகக்குழு ஒன்றில் கணக்கராயமர்ந்து திறம்படப் பணியாற்றியவர். அக்காலத் தொழிலாளர்களின் நிலைகண்டிரங்கி, அவர்களின் முன்னேற்றங்கருதி பாடுபட முற்பட்டார். அதனைத் தடுத்தற்கென வணிகக்குழுவினர் விதித்த கட்டுப்பாட்டிற் கிசையாது பதவியை யுதறித்தள்ளினார்.

பின்னர், ஆர்வமுடன் ஆன்றோர்களின் அருட்பாடல்களின் அருமை பெருமைகளையும் பழந்தமிழர்களின் செவ்விய வாழ்க்கை முறையினையும் விளக்கி மக்களிடையே மொழிப்பற்று மிகச்

செய்து வந்தார். இங்ஙிலயில், தொழிலாளர்களின் பிள்ளைகளே மிகையாகப்பயின்றுவந்த வெசிலியன் கல்லூரியில் ஆசிரியரா யமர்ந்து மாணவர்கள் தண்டமிழையுளங்கொண்டு கல்வியில் தலைசிறந்து விளங்கத் தக்காங்கு பாடஞ்சொல்லிவந்தார். அந் நாள் இல்லறந்தாங்கி, அன்பும், அறமும் விளங்கப்பெண்மையின் பெருமையை விளக்கும் ஆண்மையுடன் வாழ்க்கை நடத்தினார். மாணவர்களின் மதிவிளக்கத்திற்குழைத்த ஆசிரியர், நாட்டவர் நலத்தில் கருத்துக்கொண்டார். இவரது அகவாழ்வு சிறக்க நின்ற அருந்துணைவியார் இவ்வுலகைத்துறக்க, இவரும் மனத்துறவு பூண்டு அரசியல் வாழ்வு வளமுற ஆசிரியப் பணியைவிடுத்து, கேட்டார்ப்பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்ப வீரவுரை வழங்கும் விறலினராயினார். நாடெங்கும் தோழர்களுடன் மேடையேறித் தெளிதமிழொடு நாட்டுப் பற் றையும் கலந்தூட்டி, தமிழிற் பேசல் தகவன்றென வேற்று மொழிகொண்டு வழங்கிய மக்களின் தவற்றை மாற்றினார். "தேசபக்தன், நவசக்தி" எனும் அரிய வெளியீடுகளை நடத்திப் புத்துணர்ச்சி கலந்த தமிழ்விருந்தால் மக்களைக் கல்வி, அரசியல், சமூகச் சீர்திருத்தம், தொழிலாளர் முன்னேற்றம், பெண்கள் முன்னேற்றம், சமயப் பொதுமை, ஆகிய எத்துணையோ துறை களில் முன்னேறச் செய்துள்ளார்.

சேக்கிழார்க்கு எழுதிய குறிப்புரையும், வள்ளுவர்க்கு வழங்கிய அகலவுரையும் என்றும் நின்று நிலவும் நீர்மைய. நடையழகும், சொல்லழகும் பொருளழகும் பொதுளப் பெண் ணின் பெருமை, தமிழ்த் தென்றல், இளமைவிருந்து, முருகன் அல்லது அழகு முதலிய சிறந்த உரைநூல்களை வழங்கித் தமி ழிலக்கிய உரைநடைப் பகுதியை வளம்படுத்தியுள்ளார்.

இவர் அன்பு, அறிவு, ஆற்றல், உறுதி, உள்ளொளி, உயர் நோக்கு, உரைவளம் என்னும் இன்ன பலவியல்பெலாம் வாய்க் கப் பெற்ற புலவர் பெருமகன். இச்சான்றோரை ஈன்றபெருமை திருவாரூர் விருத்தாசல முதலியார் அவர்கட்கும், தமிழுலகிற் களித்த புகழ் தஞ்சை வளநாட்டிற்குமே உரித்து. செயற்கரிய செய்துவரும் இப்பெருந்தகையை வாய்ப்புழியெலாம் போற்ற லோடு, அவர் காட்டிய செந்நெறி நின்றொழுகல் நம்மவர் கடனாம்.

பொங்குக செந்தமிழ்! பொலிக மணிவிழா!

வாழ்கநம் முதலியார்! வாழிய தமிழர்!